**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 12/நகராட்சி/2018**

**நாள் : 07/11/2018**

**திரு C. விக்னேஸ்வரன்,**
**கோயம்புத்தூர் – 641 017.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**குன்னூர் நகராட்சி,**
**குன்னூர் – 643 102.** – **எதிர் மனுதாரர்**

கோயம்புத்தூர், வடமதுரை, குருடம்பாளையம் அஞ்சல், தண்டபாணி நகர், 3/108 என்ற முகவரியில் வசிக்கும் திரு C. விக்னேஸ்வரன் அவர்களின் 11.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 12/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் நகரட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர், வடமதுரை, குருடம்பாளையம் அஞ்சல், தண்டபாணி நகர், 3/108 என்ற முகவரியில் வசிக்கும் திரு C. விக்னேஸ்வரன் என்பவர், தனது மனுவில் குன்னூர் நகராட்சியில் நகரபுல எண்.பி/31/42 நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து, அனுமதி இல்லாமல் கோவில் கட்டப்பட்டுள்ளதையும், மனித உயிர்களுக்கு பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்தையும் பேணும் வகையில் அக்கோயிலினை அகற்ற குன்னூர் நகராட்சிக்கு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடம் 13.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. குன்னூர் குமரன் நகர் பகுதியில் புல எண்.பி/31/42 வருவாய்துறைக்குச் சொந்தமான நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து திரு ஆர். சுதர்சன் என்பவர் கோவில் கட்டியுள்ளார் என்றும், அக்கோவிலில் அமர்ந்து குறி சொல்வதாகப் பலரை ஏமாற்றி பணம் சம்பாதித்து வருகிறார் என விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், அமாவாசை இரவில் பூஜை நடத்துவதாகச் சொல்லி பெண்களை ஏமாற்றி வருகிறார் என்றும், சாதிக் கலவரத்தையும் மதக்கலவரத்தையும் தூண்டுகிறார் என்றும் தெரிவித்தார். கோவில் சார்ந்த டிரஸ்ட் ஒன்றை நடத்தி வருவதாகவும், அரசியல் கட்சி கூட்டத்தை நடத்தி பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் செயலில் ஈடுபடுவதால் கோவில் ஆக்கிரமிப்பை அகற்ற ஆணையிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

2. குன்னூர் நகராட்சி ஆணையர் தனது 08.10.2018 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுதாரரின் மனைவி திருமதி கலைவாணியின் சகோதரி திருமதி காயத்திரி என்பவரின் கட்டிடத்திற்கு அருகே நகரளவை எண்.31–இல் கட்டப்பட்டுள்ள மாசாணி அம்மன் கோவிலை

அகற்ற ஆணையிடக்கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 24102/2018 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினை முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், அவ்வழக்கில் உதகை மாவட்ட ஆட்சியர், குன்னூர் வட்டாட்சியர், குன்னூர் நகராட்சி ஆணையாளர் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். மேலும், கோவில் கட்டப்பட்டுள்ள நிலம் வருவாய்த்துறைக்குச் சொந்தமானது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மதவழிபாட்டுத் தலங்களை அகற்ற நகராட்சி விதிகளில் வழிவகை இல்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன், முறையீட்டு மனுதாரருக்கும் திருமதி காயத்திரி என்பவருக்கும் உள்ள குடும்பப் பிரச்சினை காரணமாக அரசு அலுவலகங்களுக்கு மனுச் செய்யும் வழக்கத்தினை மனுதாரர் கொண்டுள்ளார் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. குன்னூர் நகராட்சி, குமரன் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள மாசாணியம்மன் கோவில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மேலும், முறையீட்டு மனுதாரர் இது சம்பந்தமாக 24102/2018 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதுடன் இம்முறைமன்ற நடுவத்திலும் முறையீடு செய்துள்ளார். கோவில் கட்டப்பட்டுள்ள நிலம் வருவாய்த் துறைக்குச் சொந்தமானது. மேலும், நீதிமன்ற வழக்கும் நிலுவையில் உள்ளது. இம்முறைமன்றம் தனது அதிகார வரம்பிற்குற்குப்பட்டே செயல்படும். குடும்ப பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தை தவறாகப் பயன்படுத்த மனுதாரர் முயற்சிக்கிறார் எனத் தெரிகின்றது. உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (c)–இன் படி விசாரிக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

23/11/18

22.11.18

23/11/18

பெறுநர்

1. திரு C. விக்னேஸ்வரன்,
3/108, தண்டபாணி நகர்,
குருடம் பாளையம் அஞ்சல்,
வடமதுரை,
கோயம்புத்தூர் – 641 017.

2. நகராட்சி ஆணையர்,
குன்னூர் நகராட்சி,
குன்னூர்.
உதகை மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி